# ஹஜ்-உம்ரா வழிகாட்டி!

## ஹஜ்-இன் வகைகள்

1.தமத்து: உம்ரா செய்துவிட்டு நிறைவேற்றப்படும் ஹஜ்
2.இஃப்ராத்:ஹஜ் மட்டும் நிறைவேற்றுவது!
3.கிரான்:உம்ரா-வையும் ஹஜ்-ஜையும் ஒருசேர நிறைவேற்றுவது!




## ஹஜ்-இன் கிரியைகள்

**இஹ்ராம்**

நிய்யத் எனும் எண்ணம், குளிப்பு,நறுமணம் பூசுதல், இஹ்ராம் ஆடை அணிதல், இரண்டு ரக்அத் தொழுதல்

**தல்பிய்யா**

ஹஜ் தமத்துக்கானது:
லப்பைக் அல்லாஹூம்ம பி உம்ரா-ஆஜராகிவிட்டேன் அல்லாஹ்வே!
உம்ரா-வுக்காக (நான் ஆஜராகிவிட்டேன்)

ஹஜ் கிரான்-வகைக்கானது:
லப்பைக் அல்லாஹூம்ம பி ஹஜ்ஜ வ உம்ரா - ஆஜராகிவிட்டேன் அல்லாஹ்வே! உம்ரா மற்றும் ஹஜ்ஜூக்காக (நான் ஆஜராகிவிட்டேன்)

ஹஜ் இஃப்ராத் வகைக்கானது:
லப்பைக் அல்லாஹூம்ம ஹஜ்ஜன்-ஆஜராகிவிட்டேன் அல்லாஹ்வே!
ஹஜ்ஜூ-க்காக (நான் ஆஜராகிவிட்டேன்)

**தவாஃப்**

புனித கஅபா-வுக்குள் நுழைந்த பின்னர் புனிதப் பயணி ஒருவர் தவாஃப் செய்துவிட்டு, இரண்டு ரக்அத் தொழுகின்றார்.

**ஸஈ**

தமத்து வகை ஹஜ்-இல், உம்ரா-வுக்காக ஸஈ செய்யப்பட வேண்டியது கட்டாயம்.ஆனால், கிரான் மற்றும் இஃப்ராத் வகையில் ஸஈ-ஐ தாமதப்படுத்தலாம்.

தமத்து வகை ஹஜ் மேற்கொள்பவர் பின்னர், தலைமுடியை மழிக்கவோ, குறைக்கவோ செய்கின்றார்.
இவ்வாறு செய்து முடித்தவுடன், உம்ரா நிறைவேறுகின்றது. பின்னர், முழுமையாக இஹ்ராமிலிருந்து வெளியேறிவிடுகின்றார்.

தமத்து வகை ஹஜ் செய்பவர் துல்ஹஜ் 8 அன்று ஹஜ்-ஜூக்கான இஹ்ராம் அணிகின்றார். பின்னர், லப்பைக் அல்லாஹூம்ம ஹஜ்ஜன்-ஆஜராகிவிட்டேன் அல்லாஹ்வே! ஹஜ்ஜூ-க்காக (நான் ஆஜராகிவிட்டேன்) எனும் தல்பிய்யா-வை மொழிகின்றார்.

**மினா-வை நோக்கி..!**

மினா-வுக்கு செல்லும் புனிதப் பயணி அங்கு ளுஹர், அஸ்ர், மக்ரிப், இஷா மற்றும் ஃப்ஜர் தொழுகின்றார்.

**அரஃபா நோக்கி..!**

துல் ஹஜ் 9-ஆம் நாள் சூரிய உதயத்தின்போது, புனிதப் பயணி அரஃபா நோக்கி பயணமாகின்றார். அங்கு திக்ர் மற்றும் பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றார்.

**முஸ்தலிஃபா நோக்கி..!**

சூரியன் மறையும்போது, புனிதப் பயணி முஸ்தலிஃபா நோக்கி பயணமாகின்றார். அங்கு இரவைக் கழிக்கின்றார்.

**மினா-வுக்குத் திரும்புதல்..!**

சூரியன் உதயமாவதற்கு முன்னர், அவர் மினா-வுக்கு செல்கின்றார் அங்கு ஜமராத்-அல்-அகாபா-சாத்தானை கல்லெறிதல் கிரியை மேற்கொள்கின்றார்.

**குர்பானீ**

துல்-ஹஜ் 10 அன்று பலிப்பிராணியை குர்பானீ செய்கின்றார்.தனது தலைமயிரை மழிக்கின்றார் அல்லது குறைக்கின்றார். இப்போது, தனது துணைவியுடன் உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்த்து ஏனைய அனைத்தும் அவருக்கு ஆகுமாகி அனுமதிக்கப்படுகின்றது.

**மக்கா-வுக்குத் திரும்புதல்..!**

பின்னர் புனிதப்பயணி மக்காவை நோக்கி திரும்பி அங்கு ஹஜ்ஜூ-க்கான தவாஃபும் ஸஈ-யும் செய்கின்றார்.
தவாஃபும் ஸஈ-யும் முடித்துவிட்டு மீண்டும் மினா திரும்பகின்றார். அங்கு அவ்விரு நாட்களிலும்,
மூன்று ஜமராத்-களிலும் சாத்தானை கல்லெறிதல் கிரியை-யை நிறைவேற்றுகின்றார்.

**பிரியா விடை தவாஃப்**

மேற்சொன்ன அனைத்து கிரியையைகளையும் முடித்த ஒரு புனிதப் பயணி இறுதியாக பிரியா விடை தவாஃப் செய்யாத வரை மக்கா-வை விட்டு வெளியேறுதல் கூடாது.

இது தவிர்த்து, மதீனா சென்று அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலைத் தரிசிப்பதும் மிகவும் விரும்பத்தக்கது.